# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**C.C.1/2018** P.W. 7

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name :திருமதி. ஜெனோவா செல்வி | Father's Name . |
| Village : | Taluk : |
| Caste : | Calling : |
| Religion : | Age : |
| Date : 30.09.2021 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 0 30.09.2021.

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் நாகப்பட்டினம் சலவைக்குளம் முகமதியார் தெரிவில் வசித்து வருகிறேன். நான் Child line 1098 ல் குழு உறுப்பினராக வேலைப்பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியுடம் இன்னொருவரும் இருந்தார் அவர் பெயர் விஜி லெட்சுமி என்றும் சொல்வார்கள். 23.3.2017 ல் Child line க்கு ஒரு போன் வந்தது. சரவணன் என்பவர் பேசினார் அவர் சிபிசிஐடி ஆய்வாளர் ஆவார். அப்போது காலை 10 மணயிருக்கும். புத்தூர் அண்ணாசிலை ரவுண்டானா அருகில் வரச்சொன்னார்கள். நானும் மற்றொரு குழு உறுப்பினர் ராஜாத்தியும் போனோம். அங்கே விஜி இருந்தார். அவரை ஆய்வாளர் விசாரணை செய்து கொண்டிருந்தார். அந்த விசாரணையை டைப் செய்து கொண்டிருந்தார். அது ஒப்புதல் வாக்குமூலம் அதில் எதிரி வேறு என்னென்ன செய்தார் என்று விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி சுகன்யா என்பவர் குழந்தையை பற்றி சொன்னார்கள். சுகன்யாவுக்கும் அவர்களுக்கும் ஏதோ பிரச்சனைபோல் தெரிந்தது. வேளாங்கன்னியில் இருந்து விஜயலெட்சுமி சுகன்யாவின் குழந்தையை அவரும் அரவது கணவரும் சேர்ந்து தூக்கி கொண்டு வந்துவிட்டதாக சொன்னார். அவரது கணவர் எங்கிருந்கிறார் என்று கேட்டதற்கு அந்தணப்பேட்டை ரயில்வேஸ்டேசன் பக்கத்தில் இருப்பதாக சொன்னார். அந்த இடத்திற்கு அவரே

ஆய்வாளரை அழைத்துக்கொண்டுபோய் அவர் இருக்கும் இடத்தை காண்பித்தார். அவருடன் ஆய்வாளர் நான் எங்கள் குழுவின் மற்றொரு உறுப்பினர் எல்லோரும் போனோம். அங்கு குழந்தை இருந்தது. அந்த குழந்தையை மீட்டுவிட்டு அவரையும் அழைத்துக்கொண்டு சிபிசிஜடி அலுவலகத்திற்கு போனோம். அங்கு ஆவணங்களை எல்லாம் நமுனாவாக தயார் செய்து கொண்டு சாட்சியாக எங்களிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.3. கைது குறிப்பாணையில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அது அதசாஅ.4. மற்றொரு எதிரியின் கைது குறிப்பாணையில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அது அதசாஆ.5. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னைவிசாரணை செய்தார்.

**எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை**.

Child line 1098 க்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு போன் வருவதன் அடிப்படையில் எனக்கு ஆய்வாளரை தெரியும் என்றால் சரிதான். புத்தூர் அண்ணாசிலை சாலை நான்கு ரோடு சந்திப்பு என்றால் சரிதான். நான்கு பக்கமும் கடைகள் இருக்கும் என்றால் சரிதான். அங்கு ஒரு பேருந்து நிறுத்தம் இருக்கிறது என்றால் சரிதான். மக்கள் நின்றிருப்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் போனதாக சொல்லும் அன்றும் அங்கு அந்த நேரத்தில் மக்கள் நின்றிருந்தார்கள். எல்லா கடைகளிலும் ஆட்கள் இருந்தார்கள். காவல் நிலையத்தில் மடிக்கணினியில் டைப் செய்துதான் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். போலிசார் எதிரிகளிடம் கேள்வி கேட்டு கேள்வி பதிலாக பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். நான் மொத்தமாக 2 கையெழுத்து போட்டேன். என்னிடம் கையெழுத்து வாங்கும்போது எதிரிகள் இருவரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். யாரிடம் போலிசார் கேள்வி கேட்டு பதிவு செய்து கொண்டாரர்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. விஜயலெட்சுமியிடம் தான் கேள்வி கேட்டுபதிவு செய்து கொண்டார்கள். போலிசார் என்னிடம் சாட்சியாக கையெழுத்து வாங்கிய கேள்வி பதில் பதிவு செய்து கொண்ட தாள்கள் 4 பக்கங்கள் இருக்கும். எதிரிகளிடமும் ஒவ்வொரு பக்கத்திலும் போலிசார் கையெழுத்து வாங்கி கொண்டார்களா என்றால்

அது எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் சொல்லிக்கொடுத்து ஞாபகம் இல்லைஎன்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி அளிப்பதற்கு முன்பு போலிசார் வழக்கு பற்றி விபரங்களை எனக்கு சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்துதான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் காவல் துறையினரால் தயார் செய்யப்பட்ட கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் அனைத்தும் போலிசாரால் ஜோடிக்கப்பட்ட வழக்கில் அவர்கள் சொல்லிக்கொடுத்ததன்பேரில் சொன்ன விபரங்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**